DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 29/2023**

**Deposition of LW2 examined as PW2** Dt. 10.06.2025

| | |
|---|---|
| Name | சாரதாம்பாள் |
| Father's/Husband's Name | ராமசாமி |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | |
| Age | 80/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.06.2025

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வயது முதிர்வு காரணமாக வீட்டில் ஓய்வில் இருந்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை. காலை 10.00 மணியளவில் எங்கள் வீட்டு கொல்லைபுறத்தில் சத்தம் கேட்டு வந்து பார்த்த போது எனது மகன் சிவாவை ராமலிங்கம் அடித்து கொண்டிருந்தார். எதிரி ரஞ்சிதா கட்டைகழியால் என்னை முதுகில் அடித்துவிட்டு எதிரிகள் அங்கிருந்து சென்றார்கள். எனது மகன் என்னை சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி ரஞ்சிதா கட்டைகழியால் அடித்த விபரத்தையும் சிவா என்னை மருத்துவமனக்கு அழைத்து சென்ற விபரத்தையும் போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் இல்லை. நீங்கள் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது மகனும் மருமகளும் உலகநாதன், ஆண்டவர்குரு ஆகியோரும் சேர்ந்து கொண்டு எதிரிகளை தாக்கிவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக என் மகன் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாகவும், உண்மைக்கு மாறாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் முதன்முறையாக மிகைப்படுத்தி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

10.6.25

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை

LTI mark of Sarathamba